**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27 ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.72/2020**

சங்கப்பிள்ளை ....**வாதி**

**//எதிர்//**

நல்லுச்சாமி …….**பிரதிவாதி**

இவ்வழக்கு எனது முன்னிலையில் கடந்த 24.04.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.சதீஸ்குமார் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பரமசிவம் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது வாதியால், தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வழக்குரையின் சுருக்கம்:**

**2)** தாவா 1வது அயிட்ட சொத்தும், இதர சொத்துக்களும் வாதியால் ஒரு பெருமாள் பிள்ளை, சரசு (எ) சரஸ்வதி மற்றும் மாரியம்மாள் (எ) மாரியாயி ஆகியோர்களிடமிருந்து, கடந்த 20.02.2014 அன்று ஒரு

பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் வாயிலாக தகுந்த மறுபயனுக்கு கிரையம் பெறப்பட்ட சொத்தாகும். மேற்படி சொத்தை கிரையம் பெற்ற நாள்முதல் வாதியே அதன் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார். தாவா 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதியின் அனுபவத்தை அனுசரித்து கடவூர் வட்டாட்சியர் வாதிக்கு பட்டா எண்.1871 என்ற பட்டாவை வழங்கியுள்ளார்.

**3)** தாவா 2வது அயிட்ட சொத்தானது வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா 2வது அயிட்ட சொத்தில் உள்ள வாதியின் அனுபவத்தை அனுசரித்து கடவூர் வட்டாட்சியர் பட்டா எண்.276 என்ற பட்டாவை வாதிக்கு வழங்கியுள்ளார். தாவா சொத்துக்களில் வாதி அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் நாளது தேதி வரை இருந்து வருகிறார். தாவா சொத்துக்களுக்கு வாதி உரிய கிஸ்துகளை செலுத்தி வருகிறார். தாவா வரைபடத்தில் காண்பித்தவாறு தாவா சொத்துக்கள் இரண்டும் ஒரே தாக்காக வாதியின் அனுபவத்தில் உள்ளன.

**4)** இந்த பிரதிவாதிக்கு தாவா சொத்துக்கு அருகில் உள்ள புல எண்.475/1 மற்றும் 475/3 ஆகிய புல எண்களில் சொத்துக்கள் உள்ளன. தாவா சொத்துக்களில் ஒருபோதும் இந்த பிரதிவாதிக்கு எவ்வகையான உரிமையும், அனுபவ பாத்தியமும், உடைமையும் இருந்தது இல்லை. தாவா சொத்துக்களுக்கு இந்த பிரதிவாதிகள் முற்றிலும் அந்நியர்கள் ஆவார்கள். இவ்வாறு இருக்கும் நிலையில், கடந்த 2018ம் வருடம் தாவா சொத்துக்களில் பிரதிவாதி அத்துமீறி நுழைய முயற்சித்தபோது வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே

பிரச்சினை ஏற்பட்டது. அதன்பின்பு, ஊர் பஞ்சாயத்தாரர்கள் முன்னிலையில், வாதி கடவூர் வட்டாட்சியரிடம் தாவா சொத்தை அளவீடு செய்ய மனு தாக்கல் செய்துள்ளார். அதன்படி, தாவா சொத்துக்கள் நில அளவையரால் அளவீடு செய்யப்பட்டன.

5) கடவூர் வட்டாட்சியரின் உத்தரவின் பெயரில் தாவா சொத்துக்களை நில அளவையர் அளந்து அத்து காண்பித்துவிட்டு சென்றுவிட்டார். இந்நிலையில், வாதி கடந்த 28.06.2020 அன்று தாவா சொத்துக்களில் தான் விளைத்துள்ள பயிர்களை கால்நடைகள் சேதப்படுத்தாமல் பாதுகாக்கும் பொருட்டு, தாவா சொத்துக்களைச் சுற்றிலும் வேலி அமைக்க முற்பட்ட போது பிரதிவாதியும், அவரது ஆட்களும் வாதியின் தாவா சொத்தில் உள்ள அமைதியான அனுபவத்தை இடையூறு செய்ததால், வாதியால் தாவா சொத்தை சுற்றிலும் வேலி அமைக்க முடியவில்லை. இருப்பினும், வாதி பிரதிவாதியின் சட்டமுறையற்ற நடவடிக்கையை தடுத்துவிட்டார். பிரதிவாதி சட்டத்தை மதியாதவர். எனவே, இந்நீதிமன்றத்தின் தடை உத்தரவு இருந்தால் மட்டுமே வாதியால் அவரது தாவா சொத்திற்கு முறையாக வேலி அமைத்து அனுபவம் செய்ய முடியும். எனவே, பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

6) வாதியின் வழக்கு பொய்யானது. மோசடியானது. இந்த பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர வழக்குரையில்

சொல்லப்பட்டுள்ள மற்ற சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். அசல் வழக்குரையில் பத்தி எண்.3 மற்றும் 4ல் சொல்லியுள்ள சங்கதிகள் மற்றும் தாவா மாதிரி வரைபடமானது முற்றிலும் தவறானது ஆகும். அவற்றின் உண்மைத்தன்மையை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மேற்படி தாவா மாதிரி வரைபடத்தில் காட்டியுள்ளவாறு எவ்விதமான அமைப்பும் பூஸ்துதியில் இல்லை. அவை வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணமாகும்.

**7)** வாதியால், வழக்குரை பத்தி எண்.5 முதல் 7 வரை சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் இந்த பிரதிவாதியால் மறுக்கப்படுகின்றது. அவை அனைத்தும் வழக்கிற்காக வாதியால் கற்பனையாக ஜோடிக்கப்பட்டவையாகும். அவற்றை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். புல எண்.475ற்கான புலப்பட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள நிலையில், மேற்படி புலபடமானது எந்த நோக்கத்திற்காக வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதற்கு தெளிவாக விளக்கம் எதுவும் வாதியால் சொல்லப்படவில்லை. வாதியால் அசல் வழக்குரை பத்தி எண்.9ல் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு அருகாமையில் மேற்படி கிராம புலத்தில் இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலமானது புல எண்.475/1 மற்றும் 475/3 ஆகிய புல எண்களில் சொத்துக்கள் உள்ளதாக வாதியால் வழக்குரையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி சொத்துக்களை பிரதிவாதி தன் இஷ்டம் போல் பயிர் செய்து அனுபவித்து வருகிறார். மேற்படி சொத்துக்களில் இந்த பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும், பாத்தியமும் இல்லை என்றும், மேற்படி

சொத்துக்களைப் பொறுத்து இந்த பிரதிவாதி முற்றிலும் அன்னியர் என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார்.

**8)** மேலும், இந்த பிரதிவாதி கடந்த 2018 ம் வருடம் தாவா சொத்தில் அத்து மீறி பிரவேசிக்க முயற்சி செய்தார் என்றும், வீண் தகராறு செய்தார் என்றும் வாதியால் சொல்லப்பட்டுள்ளதை இந்த பிரதிவாதி முற்றிலும் மறுக்கிறார். மேற்படி சங்கதிகள் அனைத்தையும் வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மேலும், தாவா சொத்தை வட்டாட்சியர் உத்தரவுப்படி, சம்மந்தப்பட்ட நில அளவையர் அளவீடு செய்து, எல்லைகளை நிர்ணயம் செய்து கொடுத்துள்ளார் என்று சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை வாதியே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். தாவா சொத்துக்களில், வாதி மற்றும் பிரதிவாதி இடங்களை பிரித்து காட்டுவதற்காக அத்துக்கல் ஆங்காங்கே உள்ளது.

**9)** தாவா சொத்திற்கு வடபுறம் ஆத்துவாரி உள்ளது. வாதிக்கு பாத்தியப்பட்டுள்ளதாக சொல்லப்படும் நிலங்கள் அனைத்தும் எவ்விதமான பயன்பாடும் இல்லாமல் உள்ளது. அவை வெறும் கல்லுக்காடுகளாக காணப்படுகின்றன. உண்மையில், இந்த பிரதிவாதி கல்லுக்காடுகளாக இருந்த நிலங்களை பல இலட்சம் செலவு செய்து பயன்படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற வகையில் சரி செய்து, தற்சமயம் தனக்கு தேவையான பயிர் செய்து அனுபவித்து வரும் நிலையை பார்த்து பொறாமையில் இந்த வாதி வேண்டுமென்றே பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கை தொடர்ந்துள்ளார் என்பதே உண்மையாகும்.

**10)** பிரதிவாதி மேற்படி ஆத்துவாரியை ஒட்டியுள்ள புல எண்.475/1ல் அவரது நிலத்தில் பாசன வசதிகள் செய்து கத்தரி, தக்காளி, மாட்டிற்கான சோளப்பயிர்கள் ஆகியவை பயிரிட்டு அவருக்கு பாத்தியப்பட்ட இடம் அனைத்தையும் பயன்பாட்டில் வைத்து, மேற்படி இடத்திற்குள்ளாகவே புல எண்.475/3ல் ஒரு பகுதியில் பிரதிவாதி தனது இருப்பிடத்தையும் அமைத்துக் கொண்டு அமைதியான முறையில் குடியிருந்து கொண்டு மற்ற இடங்களில் விவசாயம் செய்து வருகிறார் என்பதே உண்மையாகும்.

**11)** எந்த காலத்திலும் இந்த வாதியின் அனுபவ சுவாதீனத்தில் எவ்விதமான இடையூறும், தடை இடைஞ்சலும் இந்த பிரதிவாதி செய்தது இல்லை. பிரதிவாதியின் நிலம் முழுவதும் விவசாய நிலமாக பயன்படுத்தப்பட்டு, பயன்பாட்டில் இருப்பதை கண்ட வாதி பொறாமை அடிப்படையில் பொய்யான காரணங்கள் கொண்டு பிரதிவாதிக்கு பொருளாதார இழப்பீடு மற்றும் மன உளைச்சலை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். நாளது தேதி வரை வாதிக்கு பாத்தியப்பட்ட இடங்கள் கல்லுக்காடுகளாகவே உள்ளது. இவ்வழக்கில் அடிப்படை முகாந்திரம் இல்லை.

**12)** வாதி இடத்திற்கு கிழக்கில் புறம்போக்கு நிலம் உள்ளது. மேற்படி புறம்போக்கு நிலத்தைப் பயன்படுத்தி இந்த பிரதிவாதி தனது காட்டிற்கு போய்வந்து கொண்டிருந்தார். அதை வேண்டுமென்றே நடுவழியில் கொட்டகை அமைத்து, இந்த பிரதிவாதியின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்திவிட்டு, இந்த பொய்யான வழக்கினை வாதி பிரதிவாதியின் மீது தொடர்ந்துள்ளார் என்பதே உண்மையாகும். வாதி

தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. வழக்குரையில் பத்தி எண்.10 ல் சொல்லியுள்ள சங்கதிளை முற்றிலுமாக இந்த பிரதிவாதி மறுக்கிறார். கடந்த 28.06.2020 ம் தேதி அன்று வாதி தாவா சொத்தில் வேலி அமைக்க முயன்றதாக சொல்லியுள்ளது முற்றிலும் பொய். பிரதிவாதி வாதியின் அனுபவத்தை இடையூறு செய்து வேலி அமைக்காவிடாமல் தடுத்துவிட்டதாக சொல்லியுள்ளது முற்றிலும் பொய்யாகும். உண்மையில், இந்த பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் சரி சமமான பாக உரிமை உள்ளது. இந்த வாதியின் உடன்பிறந்தவர்கள் அதிகம்.

**13)** ஆதலால் பாக உரிமையானது இந்த வாதிக்கு குறைவாகவும், பிரதிவாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களில் சரிசமமான பாக உரிமை உள்ளபடியால் அதிக பரப்பளவில் சொத்துக்கள் கிடைத்து இருப்பதால், இந்த வாதி பிரதிவாதி மீது கொண்ட பொறாமையின் காரணமாக ஒருவருக்கு இவ்வளவு சொத்துக்கள், தனக்கு சொத்துக்கள் குறைவாக உள்ளதே என்ற கெட்ட தீய எண்ணத்தின் அடிப்படையில், இந்த பிரதிவாதியின் அமைதியான அனுபவ சுவாதீனத்தில் எவ்வகையிலாவது இடையூறு செய்து, அவரது சொத்துக்களை அவர் அனுபவிக்க விடாமல் தடுக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், பொறாமை அடிப்படையிலும் இவ்வழக்கை வாதி தொடர்ந்துள்ளார் என்பதே உண்மையாகும்.

**14)** இவ்வழக்கின் வழக்குமூலம் தவறு. அது கற்பனையாக, பொய்யாக, மோசடியாக தயாரிக்கப்பட்ட ஒன்றாகும். மேற்படி, 28.06.2020 ம் தேதி வழக்குரையில் கண்டுள்ளபடியும்,

வழக்குமூலத்தில் கண்டுள்ளபடியும், எவ்விதமான சம்பவமும் நடைபெறவில்லை. வழக்கு மதிப்பீட்டு விவரம் சரியாக கணக்கிடப்படவில்லை. வாதியின் வழக்கில் முதல் நோக்கும் சம நோக்கும் சிந்திக்கவில்லை. வாதி வழக்கில் கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தத்தல்ல. வாதி தூய்மையான கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை. உண்மை சங்கதிகளை மறைத்து வேண்டுமென்றே பிரதிவாதியை மன சஞ்சலத்திற்கும், தேவையற்ற வீண் அலைக்கழிப்பிற்கும் ஆளாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**<u>எழுவினாக்கள்:</u>**

**15)** இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது:

| | |
|---|---|
| 1 | Whether the Plaintiff is in possession of the suit property? |
| 2 | Whether the Plaintiff is entitled for the relief of Permanent Injunction? |
| 3 | To what other relief? |

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**16)** வாதி தரப்பில் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையான ஆவணங்கள்

குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், நீதிமன்ற ஆணையர், வாதி தரப்பில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரின் அறிக்கை, வரைபடம் மற்றும் நில அளவையரின் வரைபடம் ஆகியவை பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் போது நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3 வரையான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பு சாட்சியம் வா.சா.2 உடன் முடிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியாகிய நல்லுச்சாமி, பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், ஒரு கிருஷ்ணன் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.சா.ஆ.11 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, பிரதிவாதி தரப்பு சாட்சியம் பி.சா.ஆ.2 உடன் முடிக்கப்பட்டது.

**<u>தீர்வு:</u>**

**<u>எழுவினா எண்.1 மற்றும் 2:</u>**

**17)** தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், வாதியின் அனுபவத்தை அனுசரித்து தாவா சொத்துக்களுக்கு பட்டா வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்றும், வாதி தாவா சொத்தில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களை கால்நடைகளிடமிருந்து ஏற்படும் சேதங்களை தவிர்த்து பாதுகாக்கும் பொருட்டு, தாவா சொத்துக்களை சுற்றி வேலி அமைக்க முற்பட்ட போது, பிரதிவாதி வாதியின் அமைதியான அனுபவத்தை இடையூறு செய்ததாக கூறி, தாவா சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்

கட்டளை பரிகாரம் வேண்டி, வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி, சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொருட்டு, வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**18)** வா.சா.ஆ.1 ஆவணமானது, தாவா சொத்தின் மாதிரி வரைபடம் ஆகும். வா.சா.ஆ.2 ஆவணமானது, கடந்த 20.02.2014 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் பதிவிறக்க நகலாகும். வா.சா.ஆ.2 யைப் பரிசீலனை செய்கையில், பெருமாள்பிள்ளை, சரசு (எ) சரஸ்வதி மற்றும் மாரியம்மாள் (எ) மாரியாயி ஆகியோர்களிடமிருந்து, வாதி தாவா 1வது அயிட்ட சொத்தான தே.இடையப்பட்டி மேல் பாக கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.475/2B ல் உள்ள மொத்தம் ஹெக்.0.16.0 ஏர்ஸ் நிலத்தில் சுமார் ஹெக்.0.15.0 ஏர்ஸ் நிலத்தையும், மேற்படி கிராம புறத்தில் புல எண்.475/2A ல் உள்ள ஹெக்.0.01.41 ஏர்ஸ் நிலத்தையும், மேற்படி புல எண்ணில் உள்ள கிணர் ஒன்றில் 1/3 பங்கையும் சேர்த்து மேற்கண்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் வாயிலாக கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

**19)** மேலும், வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் உள்ள வாசகங்களை பரிசீலனை செய்ததில், தாவா 1வது அயிட்ட நிலமானது புல எண்.475/2B ல் உள்ள நிலத்தினை இவ்வழக்கின் பிரதிவாதிக்கு ஒதுக்கிய ஏக்.0.02½ சென்ட் பாதை நிலம் போக மீதமுள்ள ஹெக்.0.15.0 ஏர்ஸ்க்கு ஏக்.0.37 சென்ட் நிலத்தையும், மற்ற

நிலத்தையும் சேர்த்து வாதிக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.3 ஆவணமானது, கடந்த 18.01.2020 தேதியிட்ட பட்டா எண்.1871 ற்கான பதிவிறக்க நகலாகும். வா.சா.ஆ.3 ஆவணத்தைப் பரிசீலனை செய்கையில், தாவா 1 வது அயிட்ட சொத்தாகிய இடையப்பட்டி மேற்கு கிராம புல எண்.475/2B2 ல் உள்ள ஹெக்.0.15.00 ஏர்ஸ் நிலத்திற்கு வாதி பெயரில் மேற்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**20)** வா.சா.ஆ.4 ஆவணமானது, கடந்த 18.01.2020 தேதியிட்ட பட்டா எண்.276 ற்கான பதிவிறக்க நகலாகும். மேற்படி பட்டாவை பரிசீலனை செய்கையில், இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.338/14 மற்றும் இவ்வழக்கின் 2 வது அயிட்ட சொத்தாகிய புல எண்.475/2D ல் உள்ள ஹெக்.0.25.00 ஏர்ஸ் நிலத்திற்கு மேற்படி பட்டாவானது வாதி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.5 ஆவணமானது, கடந்த 01.12.2017 தேதியிட்ட வாதி பெயரில் ஏற்பட்ட வாய்தா ரசீதின் அசல் ஆகும். மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தைப் பரிசீலனை செய்கையில், தாவா 2 வது அயிட்ட சொத்திற்குரிய பட்டா எண்.276 மற்றும் தாவா 1 வது அயிட்ட சொத்திற்குரிய பட்டா எண்.1871 மற்றும் இதர பட்டா எண்களுக்குரிய சொத்துக்களைப் பொறுத்து மேற்கண்ட வாய்தா தொகையானது வாதியால் செலுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**21)** வா.சா.ஆ.6 ஆவணமானது, கடந்த 28.11.2018 தேதியிட்ட நில அளவை சான்றாகும். மேற்படி நில அளவை சான்றை பரிசீலனை

செய்கையில், தாவா 1 மற்றும் 2 வது அயிட்ட சொத்துக்களை வாதி தரப்பில் அளந்து அத்து காட்ட கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வாதி மனு செய்திருந்ததாகவும், மனுவின் மீது நடவடிக்கை எடுத்த குறுவட்ட அளவையர் கிராம ஆவணங்களுடன் புலம் சென்று விசாரணை மேற்கொண்டு அளந்து அத்து காட்டியதாகவும், மேற்கண்ட நில அளவையர் சான்றானது கடவூர் வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. ஆனால், மேற்கண்ட நில அளவையர் சான்றில் கடவூர் வட்டாட்சியரின் அலுவலக முத்திரை எதுவும் காணப்படவில்லை என்பதை அறிய முடிகின்றது.

**22)** வா.சா.ஆ.7 ஆவணமானது, கடந்த 25.09.2021 தேதியிட்ட வாதியால் பாலவிடுதி காவல் நிலையத்தில் பிரதிவாதி மற்றும் பலருக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகாரின் கையிருப்பு நகல் மற்றும் புகார் மனுவின் ரசீதாகும். மேற்படி புகாரையும், புகார் மனு ரசீதையும் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தில் வாதி இல்லாத சமயத்தில் வாதியால் போடப்பட்டுள்ள கீத்து கொட்டகையை இடித்து பிரதிவாதி கீழே தள்ளிவிட்டதாகவும், அதை வாதி கேட்க சென்றபோது பிரதிவாதி வாதியிடம் வீண் தகராறு செய்ததாகவும், மேலும் பிரதிவாதி வாதியை மிரட்டியதாகவும் சொல்லி உரிய நடவடிக்கை எடுக்க பிரதிவாதிக்கு எதிராக மேற்படி புகார் மனுவானது வாதியால் பாலவிடுதி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், அதற்கான புகார் மனு ரசீதானது பாலவிடுதி காவல் நிலையத்தாரால் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**23)** வா.சா.ஆ.8 ஆவணமானது, கடந்த 23.12.2024 தேதியிட்ட வாதியால் பிரதிவாதிக்கு எதிராக பாலவிடுதி காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட புகார் மனுவின் ரசீதாகும். மேற்படி வா.சா.ஆ.8 யைப் பரிசீலனை செய்கையில், வாதி தனது நிலத்தில் விவசாயம் செய்து வந்த நிலையில், தனது நிலத்திற்கு சென்ற போது பிரதிவாதி தனது நிலத்திற்குள் வரவிடாமல் அவரை தள்ளிவிட்டதாகவும், அந்த நிலம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து சர்வே கமிஷன் மூலம் அளந்த பிறகும் பிரதிவாதி அந்த நிலம் சம்மந்தமாக வாதியிடம் பிரச்சினை செய்வதாகவும் மேற்படி புகார் மனுவானது வாதியால் வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**24)** மேலும், வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆகிய புகார் மனுக்களானது, இவ்வழக்கிற்கு பின்னிட்டு வாதியால் பிரதிவாதிக்கு எதிராக புகார் அளிக்கப்பட்டுள்ளதற்கான மனு ரசீதுகள் என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.9 ஆவணமானது, பட்டா எண்.1871 ற்கான பதிவிறக்க நகல் ஆகும். மேற்படி பட்டாவானது, தாவா 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதி பெயரில், கடந்த 03.04.2025 அன்று பதிவிறக்கம் செய்யப்பட்டு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.10 ஆவணமானது, பட்டா எண்.276 ற்கான பதிவிறக்க நகல் ஆகும். மேற்படி பட்டாவானது, தாவா 2வது அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதியால், கடந்த 03.04.2025 அன்று பதிவிறக்கம் செய்யப்பட்டு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**25)** அதனைத் தொடர்ந்து, வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தவா சொத்திற்கு அருகே, தனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றும், மேற்கண்ட பூர்வீக சொத்தில் வாதியுடன் பிறந்த சகோதரர்களுக்கும் அதில் பங்கு உண்டு என்றும், மேலும் தனது நிலத்திற்கும் பிரதிவாதி நிலத்திற்கும் அருகே புறம்போக்கு நிலம் உள்ளது என்றும், மேற்படி புறம்போக்கு நிலத்தில், தான் சொல்லிதான் பண்ணை குட்டை அமைத்தார்கள் என்றும், மேற்படி பண்ணைக் குட்டையில், தான் விவசாயம் செய்வதால், அதை மூடி விட்டதாகவும், தாவா சொத்திற்கான அடங்கல் கணக்கீட்டை வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளதால் அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், தான் கீத்து கொட்டகை ஒன்றை புறம்போக்கு நிலமான பண்ணைக்குட்டை அமைத்துள்ள இடத்தில் அமைத்துள்ளதாகவும் ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

**26)** மேலும், இவ்வழக்கை பிரதிவாதி சர்வே கல்லை பறித்துவிட்டதால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து, வாதி மற்றும் பிரதிவாதி இடங்களை பிரித்து காண்பிப்பதற்கு தனித்தனி அத்துக்கள் உள்ளது என்றும், தனது நிலம் தரிசு நிலம்தான் என்றும், தனது நிலத்திற்கும் பிரதிவாதியின் நிலத்திற்கும் கிழக்கு பகுதியில் உள்ள புறம்போக்கு நிலத்தை பயன்படுத்திதான் தானும், பிரதிவாதியும் தங்களுக்கு பாத்தியப்பட்ட நிலங்களுக்கு சென்று வருகிறோம் என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

**27)** வாதியை தொடர்ந்து, வாதி தரப்பில் நீதிமன்ற ஆணையரை விசாரணை செய்ய மனு தாக்கல் செய்து அனுமதி பெற்று இவ்வழக்கில் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2, தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், தாவா 1 மற்றும் 2 வது அயிட்ட சொத்தில் உள்ள இயற்கை அமைப்பை தெரிந்து கொள்ளவும், மேற்படி நிலங்களை அளவீடு செய்யவும், தன்னை இந்நீதிமன்றம் இவ்வழக்கில் ஆணையராக நியமனம் செய்து, அதன்படி தாவா சொத்துக்களை பல்வேறு தேதிகளில் பார்வையிட்டு, கடந்த 25.10.2024 தேதியிட்டு இந்நீதிமன்றத்தில் தனது அறிக்கை தாக்கல் செய்ததாகவும், மேற்படி அறிக்கையை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதமானது நில அளவையரின் மருத்துவ விடுப்பு மற்றும் பணி மாறுதல் என்றும், ஆனால் அதை தனது அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றும் கூறியுள்ளார்.

**28)** மேலும், தனது அறிக்கையில், தாவா சொத்துக்களின் நான்கு எல்லை விவரங்களையும், தாவா சொத்தில் என்ன என்ன சாகுபடி செய்துள்ளார்கள் என்ற விவரத்தையும் தெளிவாக குறிப்பிட்டுள்ளதாகவும், தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 10 அடி பாதையானது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சர்வேயர் அளித்த விளக்கத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளதாகவும், ஆனால், அதற்கு ஆவணங்கள் எதுவும் பரிசீலிக்கவில்லை என்றும், தாவா சொத்துக்களின் இயற்கை அமைப்புகளை இரு தரப்பினர்களிடமிருந்து கேட்டுக்கொண்டுதான் அறிக்கை தாக்கல்

செய்ததாகவும், அதற்கு ஆவணங்கள் எதுவும் பரிசீலிக்க தேவையில்லை என்று குறிப்பிட்டு கூறியுள்ளார். மேலும், வா.சா.2 தனது முதல் விசாரணையில், தனது அறிக்கையில் பத்தி எண்.10 ல் சொல்லியுள்ள 1 இஞ்ச் நிலமானது பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை குறிப்பிட்டுள்ளதாகவும், அதில் புல எண் குறிப்பிடவில்லை என்றும், ஆனால் அது தனது தோராய வரைபடத்தில் உள்ள FNEM என்று குறிப்பிட்டுள்ள பகுதியை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நீல நிறத்தில் வண்ணமிட்டு காணப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஆக்கிரமிப்பானது புல எண்.475/2D ன் மேல்புறத்தில் உள்ள 1 இஞ்ச் நிலம் என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

**29)** அதனைத் தொடர்ந்து, வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், வாதி மற்றும் பிரதிவாதி நிலங்களுக்கு இடையே உள்ள இடைப்பட்ட பகுதியானது சீரற்று மேடு பள்ளமாக இருந்தது என்றும், நில அளவை சட்டத்தின் படி பெரிய விஸ்தீரணம் உள்ள நிலத்தை அளவீடு செய்யும் போது சிறிதளவு அளவுகள் வேறுபடும் என்றும், அவை ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று விதி உள்ளது பற்றி தனக்கு தெரியாது என்றும், மேலும் அரசு புறம்போக்கு நிலத்தில் வாதி பெயரில் பண்ணைக் குட்டை அமைத்திருப்பதாக தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாகவும், தாவா சொத்தை அளவீடு செய்ய செல்லும்போது கே.பி.எஸ் பாதை வழியாக தான் தாவா சொத்தை சென்றடைந்ததாகவும் குறிப்பிட்டு கூறியுள்ளார். மேலும், கிழக்கு பக்கம் உள்ள ஆத்துவாரியிலிருந்து மேற்கு புறம் உள்ள பிரதிவாதியின்

நிலத்திற்கு செல்ல நேரடியாக எந்த பாதையும் பூஸ்துதியில் இல்லை என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார். வா.சா.2 ன் குறுக்கு விசாரணையில், நீதிமன்ற ஆணையரின் அறிக்கை, வரைபடம் மற்றும் நில அளவையர் வரைபடம் ஆகியவை நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3 வரையான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**30)** மறுபுறம், பிரதிவாதி தரப்பில் வாதியால் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்பட்டு, எந்த காலத்திலும் வாதியின் அனுபவ சுவாதீனத்தில் எவ்வித இடையூறும், இடைஞ்சலும் பிரதிவாதி செய்ததில்லை என்றும், பிரதிவாதி நிலம் முழுவதும் விவசாய நிலமாக பிரதிவாதியால் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், வாதி இடத்திற்கு கிழக்கே புறம்போக்கு நிலம் உள்ளது என்றும், மேற்படி புறம்போக்கு நிலத்தைப் பயன்படுத்தி பிரதிவாதி தனது காட்டிற்கு வந்து போய்கொண்டிருந்ததாகவும், அதை வேண்டுமென்றே வாதி நடு வழியில் கொட்டகை அமைத்து பிரதிவாதியின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்திவிட்டு இந்த பொய்யான வழக்கை பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யவும் கூறப்பட்டுள்ளது.

**31)** பிரதிவாதி தரப்பு சங்கதிகளை நிரூபணம் செய்ய பிரதிவாதியானவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பி.வா.சா.1 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், வாதியின் வழக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.ஆ.1 ஆவணமானது, வாதி மற்றும் பிரதிவாதியின் குடும்பத்தின்

வம்சாவழி பட்டியல் ஆகும். பி.சா.ஆ.1 யைப் பரிசீலனை செய்கையில், வாதி மற்றும் பிரதிவாதியின் தந்தையாகிய முத்துப்பிள்ளை மற்றும் ஆறுமுகம் ஆகியோர் உடன்பிறந்த சகோதரர்கள் என்பது மேற்படி வம்சாவழி பட்டியலை பரிசீலனை செய்ததின் அடிப்படையில் அறிய முடிகின்றது. வாதி மற்றும் பிரதிவாதியின் உறவுமுறைகள் குறித்து வாதியால் எவ்வகையிலும் ஆட்சேபனை செய்யவில்லை என்பதை கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**32)** பி.சா.ஆ.2 ஆவணமானது, கடந்த 26.10.2024 தேதியிட்ட புல எண்.475 ற்கான நில புல வரைபடத்தின் சான்று நகல் ஆகும். பி.சா.ஆ.3 ஆவணமானது, கடந்த 26.10.2024 தேதியிட்ட புல எண்.474 ற்கான பதிவிறக்க நகல் ஆகும். பி.சா.ஆ.4 ஆவணமானது, கடந்த 26.10.2024 தேதியிட்ட பட்டா எண்.440 ற்கான பதிவிறக்க நகல் ஆகும். மேற்படி பட்டாவை பரிசீலனை செய்கையில், இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் உள்ள பல புல எண்களில் உள்ள நிலங்களுக்கும் புல எண் 475/1 மற்றும் 475/3 ஆகிய புல எண்களுக்கும் பிரதிவாதி பெயரில் மேற்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. பி.சா.ஆ.5 ஆவணமானது, கடந்த 26.10.2024 தேதியிட்ட இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் உள்ள புல எண்.475/2D, 475/2C மற்றும் 475/2B2 ஆகிய நிலங்களுக்கான நில புல வரைபடத்தின் பதிவிறக்க நகலாகும். பி.சா.ஆ.6 ஆவணமானது, கடந்த 26.10.2024 தேதியிட்ட இடையப்பட்டி மேற்கு கிராம புல எண்.475/1 மற்றும் 475/3 ற்கான நில புல வரைபடத்தின் பதிவிறக்க நகலாகும். பி.சா.ஆ.7

ஆவணமானது, இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் GPS Map Camera மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் அச்சிடப்பட்ட நகல் (9 எண்ணிக்கை) ஆகும்.

**33)** பி.சா.ஆ.8 ஆவணமானது, கடந்த 20.02.2014 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் பதிவிறக்க நகலாகும். மேற்படி கிரைய ஆவணத்தைப் பரிசீலனை செய்கையில், பெருமாள் பிள்ளை, சரசு (எ) சரஸ்வதி, மாரியம்மாள் (எ) மாரியாயி ஆகிய மூவரும் சேர்ந்து இந்த பிரதிவாதிக்கு இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் அமைந்துள்ள புல எண்.475/2A ல் உள்ள மொத்த ஹெக்.0.05.0 ஏர்ஸ்க்கு ஏக்.0.12 ½ சென்ட்டில் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த நிலம் போக மீதம் உள்ள ஏக்.0.00.1/2 சென்ட் அளவுள்ள பாதையை குறிப்பிட்ட நான்கு எல்லைக்குள் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்பது தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் உள்ள புல எண்.475/2B ல் உள்ள மொத்த ஹெக்.0.16.0 ஏர்ஸ்க்கு ஏக்.0.40 சென்ட்டில் குறிப்பிட்ட நான்கு எல்லைக்குள் ஹெக்.0.01.0 ஏர்ஸ்க்கு ஏக்.0.02 ½ சென்ட் நிலத்தை பாதைக்காக பிரதிவாதிக்கு மேற்படி கிரையத்தை பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது.

**34)** மேலும், மேற்படி பி.சா.ஆ.8 ஆவணத்தைப் பரிசீலனை செய்கையில், பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் உள்ள புல எண்.475/1 மற்றும் 475/3 ல் உள்ள நிலங்களுக்கு சென்று வருவதற்காக பாதைக்காக பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி கிரையமானது பேசி

முடிக்கப்பட்டுவிட்டதாக அதில் வாசகங்கள்கொண்டு எழுதப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், தாவா 1 வது அயிட்ட சொத்திற்குரிய புல எண்.475/2B ல் உள்ள வாதிக்கு கிரையம் செய்த கொடுத்த அதே நபர்கள் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த நிலம் போக மீதமுள்ள ஏக்.0.02 ½ சென்ட் நிலத்தை பாதைக்காக பிரதிவாதிக்கு பி.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது.

**35)** பி.சா.ஆ.9 ஆவணமானது, இடையப்பட்டி மேற்கு கிராம புல எண்.475/3 மற்றும் 475/1 ஆகியவற்றிற்காக 'அ' பதிவேட்டு விவரங்களின் பதிவிறக்க நகலாகும். மேற்படி 'அ' பதிவேட்டு விவரங்களைப் பரிசீலனை செய்கையில், புல எண்.475/1 மற்றும் 475/3 ஆகிய நிலங்கள் பிரதிவாதி பெயரில் வருவாய் துறை ஆவணங்களில் குறிப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. பி.சா.ஆ.10 ஆவணமானது, இடையப்பட்டி மேற்கு கிராம புல எண்.475/2D, 475/2C, 475/2B2 மற்றும் 475/2A ஆகிய நிலங்களின் 'அ' பதிவேட்டு விவரங்களின் பதிவிறக்க நகல் ஆகும். மேற்படி பி.சா.ஆ.10 யைப் பரிசீலனை செய்கையில், மேற்கண்ட நிலங்களுக்கு வாதி பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

**36)** அதனைத் தொடர்ந்து, பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தாவா சொத்தில் தனக்கு பங்கு பாத்தியம், உரிமை எதுவும் இல்லை என்றும், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி தனக்கு எதிராக பாலவிடுதி காவல் நிலையத்தில் பலமுறை புகார்

அளித்துள்ளார் என்றும், மேற்படி புகாரினை காவல் நிலையத்தார் உரிமையியல் பிரச்சினையாக இருப்பதால் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு கூறியதாகவும், மேற்படி புகாருக்கு பின்னிட்டு வாதிக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

**37)** மேலும், தனது குறுக்கு விசாரணையில், பி.வா.சா.2 தன்னுடைய சொத்திற்கு செல்வதற்கு ஆத்துவாரி வரை கிழமேல் பொதுபாதை உள்ளது என்றும், மேற்படி கிழமேல் பொதுபாதையின் வழியாக தனது நிலத்திற்கு செல்லலாம் என்றும், வாதியின் நிலத்திற்குள் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார். மேலும், வாதி அவரது சொத்தை அனுபவம் செய்வதில் தனக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்றும், ஆனால் தனது அனுபவத்தை வாதி இடையூறு செய்து வருகிறார் என்றும், ஆனால் வாதி இடையூறு செய்தார் என்பதற்காக எதிர்பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார். மேலும், வாதி புறம்போக்கு பாதையில் கொட்டகை போட்டு தனக்கு இடையூறு செய்து வந்ததால்தான் வாதி மீது புகார் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். மேலும், பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், வாதியின் அனுபவத்தை ஒருபோதும் இடையூறு செய்வதில்லை என்றும், இடையூறு செய்யப்போவதில்லை என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார்.

**38)** பி.வா.சா.1 யைத் தொடர்ந்து, கிருஷ்ணன் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் அவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் அதன் அசலுடன் இந்நீதிமன்றத்தால் ஒப்பிட்டு

பார்க்கப்பட்டு பி.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.11 யைப் பரிசீலனை செய்கையில், பி.வா.சா.2 ம், தாவா சொத்து அமைந்துள்ள இடையப்பட்டி மேற்கு கிராமத்தை சேர்ந்தவர் என்பதை அறிய முடிகின்றது. மேலும், பி.வா.சா.2 தனது முதல் விசாரணை வாக்கு மூலத்தில், வாதி மற்றும் பிரதிவாதி கூட்டு பாகஸ்தர்கள் என்றும், உண்மையில் கிழமேலாக செல்லும் மண் சாலையில் இருந்து வடக்காக உள்ள புறம்போக்கு இடத்தை கடந்தே வாதி மற்றும் பிரதிவாதி இடங்களுக்கு செல்லமுடியும் என்றும், மேற்படி புறம்போக்கு இடத்தில் வாதி தனது செல்வாக்கை பயன்படுத்தி பண்ணை குட்டை அமைத்தும், படல் வைத்தும், கொட்டகை போட்டு ஆக்கிரமிப்பு செய்ததால் வாதி மற்றும் பிரதிவாதிக்கு பிரச்சினை ஏற்பட்டதாகவும், பிரதிவாதி எவ்வித தகராறும் செய்யவில்லை என்றும், பிரதிவாதி மட்டுமே தனது நிலத்தை பன்படுத்தி விவசாயம் செய்து வருவதாகவும், மற்ற இடங்கள் எல்லாம் வானம் பார்த்த பூமியாகவும், கல் காடாகவும் உள்ளது என குறிப்பிட்டு சாட்சியம் அளித்து, பிரதிவாதியின் வழக்கையும் ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

**39)** அதனைத் தொடர்ந்து, பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், வாதி இவ்வழக்கை தாவா சொத்திற்காக தாக்கல் செய்யவில்லை என்றும், புறம்போக்கு பாதைக்காக தாக்கல் செய்துள்ளார் என்றும், தான் குடியிருக்கும் இடத்திற்கும், தாவா சொத்திற்கும் சுமார் 3 மைல் தூரம் இருக்கும் என்றும், வாதி பிரதிவாதி இடங்களுக்கு தான் சென்றதில்லை என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளதோடு பிரதிவாதியின் வழக்கை ஒத்து முரண்படாமல்

சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதி தரப்பு சாட்சியம் பி.வா.சா.2 உடன் முடித்து வைக்கப்பட்டது.

**40)** இரு தரப்பினர்களாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும், இரு தரப்பிலும் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், தாவா 1வது அயிட்ட சொத்தை வாதி வா.சா.ஆ.2 ஆக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம், கடந்த 20.02.2014 அன்று கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகின்றது. மேலும், மேற்படி கிரைய ஆவணத்தைப் பரிசீலனை செய்கையில், தாவா 1வது அயிட்ட சொத்தில் அதே தேதியில் பிரதிவாதிக்கு மேற்படி கிரைய பத்திரத்தில் கண்ட கிரையம் செய்து கொடுத்தவர்களால் தாவா 1வது அயிட்ட சொத்து அமைந்துள்ள இடையப்பட்டி மேற்கு கிராம புல எண்.475/2B நிலத்தில் ஏக்.0.02 ½ சென்ட் நிலத்தை பிரதிவாதிக்கு விற்பனை செய்த பாதை போக மீதமுள்ள மேற்படி நிலத்தில் உள்ள இடங்களையும் மற்ற நிலங்களையும் சேர்த்து மேற்கண்ட கிரைய ஆவணமானது வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**41)** எனவே, தாவா 1வது அயிட்ட சொத்தை வாதி அதன் முழு உரிமையாளராக அடைந்து அனுபவம் செய்து வருவதாக வாதி தரப்பில் நிருபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதுமட்டுமல்லாமல், தாவா 1வது அயிட்ட சொத்திற்குரிய பட்டா எண்.1871 பட்டாவானது வா.சா.ஆ.3 ஆவணத்தின் கீழ் வாதி பெயரில் வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் கண்ட மொத்த விஸ்தீரணமான

ஹெக்.0.15.00 ஏர்ஸ் 1வது அயிட்ட சொத்திற்கு, வாதி பெயரில் மேற்படி பட்டா உள்ளதை அறிய முடிகிறது. அதுமட்டுமல்லாமல் தாவா 2 வது அயிட்ட சொத்திற்குரிய இடையப்பட்டி மேற்கு கிராம புல எண்.475/2D மற்றும் இதர சொத்திற்கும் சேர்த்து வாதி பெயரில் வா.சா.ஆ.4 பட்டா உள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**42)** அதுமட்டுமல்லாமல், தாவா சொத்துக்கள் பொறுத்து வாதி பெயரில் ஏற்பட்ட வா.சா.ஆ.5 வாய்தா ரசீது ஆகியவற்றை பரிசீலனை செய்கையில், தாவா சொத்துக்களை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்பதை வாதி தரப்பில் நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, தாவா சொத்துக்கள் வாதியின் அனுபவத்தில் உள்ளதை வாதி நிரூபணம் செய்துவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, எழுவினா எண்.1 ஆனது வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**43)** இந்நிலையில், தாவா சொத்தில் வாதி பயிர் செய்திருப்பதை கால்நடைகள் சேதப்படுத்தாமல் இருக்கும் பொருட்டு தாவா சொத்தைச் சுற்றி வேலி அமைக்க வாதி முயன்ற போது பிரதிவாதி இடையூறு செய்ததால் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதியால் கூறப்பட்டுள்ளது. வாதி தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 புகார் மனு மற்றும் அதன் ரசீதுகளானது, இவ்வழக்கிற்கு பின்னிட்டு வாதியால் பிரதிவாதிக்கு எதிராக பாலவிடுதி காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாருக்கு வழங்கப்பட்ட ரசீதுகள் என்பதை அறிய முடிகின்றது. மேலும், மேற்படி புகார் மனு ரசீதுகளைப் பரிசீலனை செய்கையில்,

வாதி தாவா சொத்தில் கீத்து கொட்டகை அமைத்து 5 வருடங்களாக இருந்து வருவதாகவும், வாதி இல்லாத சமயத்தில் பிரதிவாதி மேற்படி கீத்து கொட்டகையை இடித்துவிட்டதாகக் கூறி மேற்படி புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டன என்பதை அறிய முடிகின்றது. மேற்படி இரு புகார் மனுக்களும் இவ்வழக்கிற்கு பின்னிட்டு வாதியால் பிரதிவாதிக்கு எதிராக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் ஏற்பட்ட ஆவணங்களாக இருப்பதால் வாதியால் இவ்வழக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கும், மேற்படி ஆவணங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**44)** மேலும், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.8 கிரைய ஆவணத்தைப் பரிசீலனை செய்கையில், தாவா 1வது அயிட்ட சொத்து அமைந்துள்ள புல எண்475/2B ல் உள்ள வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த நிலம் போக மீதமுள்ள ஏக்.0.02 ½ சென்ட் நிலத்தையும், மற்ற சில நிலங்களையும் சேர்த்து பிரதிவாதி மேற்கண்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் பாதைக்காகவும், தனது இதர நிலங்களாகிய புல எண்.475/1 மற்றும் 475/3 ஆகிய நிலங்களுக்கு செல்வதற்காக மேற்படி நிலங்களை பாதைக்காக கிரையமாக தகுந்த மறுபயனுக்காக கிரையம் பெற்றுள்ளார் என்பதை பிரதிவாதி தரப்பில் மேற்படி கிரைய ஆவணத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**45)** அதுமட்டுமல்லாமல், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடையப்பட்டி மேற்கு கிராம புல எண்.475/1 மற்றும் புல எண்.475/3 ஆகியவற்றிற்கான 'அ' பதிவேடு மற்றும் பட்டா

ஆகியவற்றில் பிரதிவாதி பெயரில் வருவாய் துறை ஆவணங்களில் குறிப்புகள் உள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேற்படி கிரைய ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் மூலம் இடையப்பட்டி மேற்கு கிராமம் புல எண்.475/1 மற்றும் புல எண்.475/3 ஆகிய நிலங்களானது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ள நிலங்கள் என்பதை அறிய முடிகின்றது. அதுமட்டுமல்லாமல், இடையப்பட்டி மேற்கு கிராமம் புல எண்.475/2Bல் உள்ள ஏக்.0.02 ½ சென்ட் நிலத்தை பாதைக்காக மேற்கண்ட கிரைய ஆவணத்தின் மூலம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்பதை பிரதிவாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**46)** மேலும், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சொத்து மற்றும் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அமைந்துள்ள நிலபுல வரைபடங்களைப் பரிசீலனை செய்கையில், வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தும், பிரதிவாதியின் இதர நிலங்களான புல எண்.475/1 மற்றும் 475/3 ஆகிய நிலங்களும் அருகருகே உள்ளன என்தை அறிய முடிகின்றது. அதுமட்டுமல்லாமல், வாதி மேற்படி அசல் வழக்குரையில், கடந்த 28.06.2020 அன்று தாவா சொத்தைச் சுற்றி வாதி வேலியமைக்க முயன்றபோது பிரதிவாதி அதை தடுத்து விட்டதாக கூறி வழக்குமூலம் காண்பித்து இவ்வழக்கை பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி வாதி தாக்கல் செய்துள்ளார்.

**47)** மேற்கண்ட தேதியில் தாவாவிற்கு வழக்குமூலமானது எழுந்துள்ளதாக வாதியால் சொல்லப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்துக்களில் வாதி பயிர் செய்து வருவதாகவும் சொல்லியுள்ள நிலையில், அதனை காண்பிக்க வாதி தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், சான்றாவணங்களும் முன்னிறுத்தப்படவில்லை என்பதை அறிய முடிகின்றது. மேலும், தாவா சொத்துக்களில் பயிரிடப்பட்டு விவசாயம் செய்து வருவதாக வாதியால் கூறப்பட்டுள்ள நிலையில், அதை நிரூபணம் செய்ய அடங்கல் கணக்கு மற்றும் இதர வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகின்றது.

**48)** அதுமட்டுமல்லாமல், இவ்வழக்கில் நியமனம் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர், தாவா சொத்து வாதியால் எவ்வித பயிர்களும் பயிரிடாமல் தரிசு நிலமாகதான் உள்ளதாக தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டு காண்பித்துள்ளார். இவ்வாறு இருக்கும் நிலையில், தாவா சொத்தில் வாதி பயிர் செய்துள்ளதாகவும், அவற்றை கால்நடைகள் சேதப்படுத்தாமல் இருக்கும் பொருட்டு வேலி அமைக்க வாதி முயன்றதாக சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வாதியால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. தாவா சொத்தை வாதி விவசாயம் செய்து அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ள நிலையில், அதை நிரூபணம் செய்ய தகுந்த சான்றாவணங்கள் எதுவும் வாதியால் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், வாதியால் எவ்வித பயிர்களும் பயிரிடப்படாமல் தரிசு நிலமாக இருப்பதாக நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டு சொல்லியுள்ள

நிலையிலும், வாதியானவர் தூய்மையான கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை என்றே அறிய முடிகின்றது.

**49)** மேலும், தாவா சொத்தைச் சுற்றி கடந்த 28.06.2020 அன்று வாதி வேலி அமைக்க முயன்றதாகவும், அதை பிரதிவாதி இடையூறு செய்ததாகவும், மேற்படி தேதியில் வழக்குமூலமானது இவ்வழக்கிற்கு எழுந்துள்ளதாக வாதி கூறியுள்ள நிலையில், மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்ய வாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றே அறிய முடிகின்றது. மேலும், வாதியால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பாலவிடுதி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ள புகார் மனு மற்றும் அதன் ரசீதுகளானது இவ்வழக்கிற்கு பின்னிட்டு வாதியால் தாக்கல் செய்யப்பட்டவை என்பதை அறிய முடிகின்றது. அவை இவ்வழக்கிற்கு பின்பு ஏற்பட்ட ஆவணங்கள் ஆகும். வாதியால் சொல்லியுள்ள சங்கதிகள் மேற்படி ஆவணங்களுடன் ஒத்துப்போகவில்லை என்பதை அறிய முடிகின்றது. எனவே, வாதியால் அசல் வழக்கில் சொல்லியுள்ள வழக்குமூலமானது வாதியால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**50)** இந்நிலையில், வாதி மற்றும் பிரதிவாதி நிலங்களுக்கு கிழக்கே அரசு புறம்போக்கு நிலம் உள்ளது என்றும், அதில் வாதி கீத்து கொட்டகை போட்டுள்ளதாக வாதியால் தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி

பாலவிடுதி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ள புகார் மனு மற்றும் ரசீதுகளைப் பரிசீலனை செய்கையில், வாதி தனக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களில் கீத்து கொட்டகை போட்டுள்ளதாகவும், அதை பிரதிவாதி இடித்து தள்ளிவிட்டதாகவும், அதை கேட்டபோது பிரதிவாதி வாதியை மிரட்டியதாகவும் கூறி மேற்படி புகாரானது வாதியால் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகின்றது. அவ்வாறு இருக்கும் நிலையில், வாதி தனது குறுக்கு விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி கீத்து கொட்டகையானது தனது நிலத்திற்கு கிழக்கே உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் தான் போட்டுள்ளதாக கூறியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

**51)** மேலும், வாதி மற்றும் பிரதிவாதி ஆகிய இருவரும் அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள நிலத்தை தங்களது இதர நிலங்களுக்கு செல்லும் பொது பாதையாக பயன்படுத்தி வருவதாக இரு தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், வாதி மட்டுமே அரசு புறம்போக்கு நிலத்தில் கீத்து கொட்டகை அமைத்து பிரதிவாதிக்கு இடையூறு செய்து வருவதாகவும், அதை பிரதிவாதி தட்டி கேட்டபோது வாதி தாவா சொத்துக்களில் பிரதிவாதி இடையூறு செய்வதாகக் காண்பித்து இவ்வழக்கை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாக பிரதிவாதி தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ளதை, வாதியை குறுக்கு விசாரணை செய்ததின் மூலம் பிரதிவாதியால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**52)** மேலும், பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள பி.வா.சா.2 சாட்சியின் வாக்குமூலத்திலும் இரு தரப்பினர்களுக்கும் தாவா

சொத்தைப் பொறுத்து எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும், வாதி தாவா சொத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், ஆனால் புறம்போக்கு பாதையில் தான் அமைத்துள்ள கீத்து கொட்டகையைப் பொறுத்து பிரதிவாதிக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சிகளின் விசாரணையின் மூலம், வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையேயான பிரச்சினையானது மேற்படி புறம்போக்கு பாதையில் வாதியால் போடப்பட்டுள்ள கீத்துக் கொட்டகையைப் பொறுத்து ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மாறாக, வாதி கூறியுள்ளபடி, தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை பிரதிவாதி எவ்வகையில் இடையூறு செய்தார் என்பதை வாதி தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி சங்கதிகளை வாதி தரப்பில் நிரூபணம் செய்ய தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**53)** மேலும், பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் அனுபவம் செய்து வருவது பிரதிவாதி தரப்பு ஆவணங்கள் வாயிலாகவும், பிரதிவாதி தரப்பு சாட்சிகளின் விசாரணையிலும் தெரிய வருகிறது. அதுமட்டுமல்லாமல், வாதி தனக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களில் அனுபவம் செய்வதில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று பிரதிவாதியால் குறிப்பிட்டு தனது குறுக்கு விசாரணையில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கையில், வாதி தனது விருப்பம் போல், தனக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துக்களில் வேலி அமைத்துக் கொள்வதில் பிரதிவாதிக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை என்பதை அறிய முடிகின்றது.

இவ்வாறு இருக்கையில், தாவா புல எண்களில் பிரதிவாதிக்கு கிரைய பத்திரங்களில் அடிப்படையில் பாத்தியப்பட்ட பாதை நிலம் போக வாதி தனக்கு பாத்தியப்பட்ட நிலத்தை வேலி அமைத்துக் கொண்டு தனது இஷ்டம் போல் அனுபவம் செய்துகொள்ள அனைத்து வகையிலும் உரிமையுடையவர் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**54)** இருப்பினும், தாவா சொத்தில் பிரதிவாதி வாதியின் அனுபவத்தை இடையூறு செய்வதாக சொல்லியுள்ள சங்கதிகளை வாதி தரப்பில் நிருபணம் செய்ய தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. இந்நிலையில், நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.3 வரையான அறிக்கை, வரைபடம் மற்றும் நில அளவையரின் வரைபடம் ஆகியவற்றை பரிசீலனை செய்கையில், இடையப்பட்டி மேற்கு கிராமம் புல எண்.475/2D ஆகிய 2வது அயிட்ட சொத்தில் சுமார் 1 இஞ்ச் நிலத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், மேற்படி இடமானது மேடு பள்ளமாக இருப்பதால் ஆக்கிரமிப்பு செய்ய வாய்ப்புகள் இல்லை என்று நிலஅளவையர் சொல்லியதாக, தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டு கூறியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

**55)** பொதுவாக, அதிகப்படியான விஸ்தீரணம் கண்ட நிலங்களையும், மேடு பள்ளமாக உள்ள நிலங்களையும் அளவீடு செய்யும் போது, அளவீட்டு முறைகளாலும், பூமியின் தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் ஒருசில மாறுபாடுகள் விஸ்தீரணத்தில் ஏற்படுவது வழக்கம் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இருப்பினும், தாவா 2வது அயிட்ட சொத்தின் 1 இஞ்ச் அளவில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு

செய்துள்ளதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டு கூறியுள்ள நிலையில், மேற்படி அசல் வழக்குரையை பரிசீலனை செய்கையில், வாதி தாவா சொத்தை சுற்றி வேலி அமைக்க முற்பட்டபோது அதை பிரதிவாதி இடையூறு செய்ததால் மட்டுமே இவ்வழக்குமூலம் பிரதிவாதிக்கு எதிராக எழுந்ததாக கூறி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

**56)** வாதியால், தாவா சொத்தில் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்குரையில் எவ்வகையான ஆக்கிரமிப்புகள் குறித்த எதிர்ப்புகளோ, பிரச்சினைகளோ, சங்கதிகளோ அசல் வழக்குரையில் சொல்லப்படாத நிலையில், ஆணையர் அறிக்கையில் மட்டுமே மேற்படி 1 இஞ்ச் அளவுள்ள நிலமானது பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறியதன் அடிப்படையில், தாவா அசல் வழக்குரையை திருத்தம் செய்யவோ, வழக்கு பரிகாரத்தை திருத்தம் செய்யவோ வாதி எதுவும் முற்படவில்லை என்பதை அறிய முடிகின்றது. எனவே, தாவா சொத்துக்களில் ஆக்கிரமிப்புகள் குறித்து வாதியால் எவ்வித சங்கதிகளும் வழக்குரையிலும், வழக்குமூலத்திலும் சொல்லப்படாத நிலையில், அவற்றைப் பொறுத்து இவ்வழக்கில் தீர்மானம் செய்வது அவசியமற்றது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் சொல்லப்பட்டுள்ள மேற்படி 1 இஞ்ச் ஆக்கிரமிப்பு குறித்து இவ்வழக்கில் எதுவும் தீர்மானிக்க அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**57)** அசல் வழக்குரையில் பிரதிவாதிக்கு எதிராக வாதி எவ்விதமான ஆக்கிரமிப்பு குறித்த சங்கதிகளை குறிப்பிட்டு சொல்லப்படாத நிலையில், மேற்படி நீதிமன்ற ஆணையர் மற்றும் நில அளவையர் கண்டுள்ளபடி ஆக்கிரமிப்பு குறித்து எவ்வித முடிவும் எடுக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுவதால், அவற்றை பொறுத்து எவ்வித தீர்மானமும் எடுக்கமுடியாது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**58)** தாவா சொத்தில் வாதியின் அனுபவமானது வாதியால் நிரூபணம் செய்யப்பட்டிருந்தாலும், வாதி சொல்லியுள்ளதுபோல் தாவா சொத்தில் பிரதிவாதி வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ததாக சொல்லியுள்ள சங்கதிகளை வாதி தரப்பில் நிரூபணம் செய்ய தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. தாவா சொத்தில் பிரதிவாதி வாதியின் அனுபவத்தை இடையூறு செய்தார் என்று வாதியால் நிரூபணம் செய்யப்படாத நிலையில், பிரதிவாதிக்கு எதிராக வாதி இவ்வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, எழுவினா எண்.2 வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

<u>எழுவினா எண்.3:</u>

**59)** மேற்படி அனைத்து எழுவினாக்களுக்கும் இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், வாதி மற்றும் பிரதிவாதிக்கு

கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் வேறு எதுவும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவு:**

முடிவாக, மேற்சொன்ன அனைத்து காரணங்களுக்காகவும், இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது, வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இரு தரப்பினர்களுக்கும் இடையே உள்ள உறவுமுறையைக் கருத்திற்கொண்டு செலவுத்தொகை எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ம் நாளாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.27 16:37:24 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**

**வாதி தரப்பு சாட்சி:**

**வா.சா.1** –சங்கப்பிள்ளை

**வா.சா.2** –ஹக்கீம் (நீதிமன்ற ஆணையர்)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.1** | – | தாவா சொத்தின் மாதிரி வரைபடம் |
| **வா.சா.ஆ.2** | 20.02.2014 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் பதிவிறக்க நகல் |
| **வா.சா.ஆ.3** | 18.01.2020 | பட்டா எண்.1871 ற்கான பதிவிறக்க நகல் |
| **வா.சா.ஆ.4** | 18.01.2020 | பட்டா எண்.276 ற்கான பதிவிறக்க நகல் |
| **வா.சா.ஆ.5** | 01.12.2017 | வாதி பெயரில் ஏற்பட்ட வாய்தா ரசீதின் அசல் |
| **வா.சா.ஆ.6** | 28.11.2018 | நில அளவை சான்று அசல் |
| **வா.சா.ஆ.7** | 25.09.2021 | புகார் மற்றும் மனு ரசீது அசல் |
| **வா.சா.ஆ.8** | 23.12.2024 | புகார் மற்றும் மனு ரசீது அசல் |
| **வா.சா.ஆ.9** | 03.04.2025 | பட்டா எண்.1871 ற்கான பதிவிறக்க நகல் |
| **வா.சா.ஆ.10** | 03.04.2025 | பட்டா எண்.276 ற்கான பதிவிறக்க நகல் |

**நீதிமன்ற சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | - | நீதிமன்ற ஆணையர் அறிக்கை |
| நீ.ம.சா.ஆ.2 | - | நீதிமன்ற ஆணையர் வரைபடம் |
| நீ.ம.சா.ஆ.3 | - | நிலஅளவையர் வரைபடம் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி :</u>**

**பி.வா.சா.1–** நல்லுச்சாமி

**பி.வா.சா.2**–கிருஷ்ணன்

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| **பி.சா.ஆ.1** | – | வாதி மற்றும் பிரதிவாதி குடும்பத்தின் வம்சாவழி பட்டியல் |
| **பி.சா.ஆ.2** | 26.10.2024 | புல எண்.475 ற்கான நில புல வரைபடத்தின் சான்று நகல் |
| **பி.சா.ஆ.3** | 26.10.2024 | புல எண்.474 ற்கான நிலபுல வரைபடத்தின் பதிவிறக்க நகல் |
| **பி.சா.ஆ.4** | 26.10.2024 | பட்டா எண்.440 ற்கான பதிவிறக்க நகல் |
| **பி.சா.ஆ.5** | 26.10.2024 | இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் புல எண்.475/2D, 475/2C மற்றும் 475/2B2 ஆகிய நிலங்களுக்கான நில புல வரைபடத்தின் பதிவிறக்க நகல் |
| **பி.சா.ஆ.6** | 26.10.2024 | இடையப்பட்டி மேற்கு கிராம புல எண்.475/1 மற்றும் 475/3 ற்கான நில புல வரைபடத்தின் பதிவிறக்க நகல் |
| **பி.சா.ஆ.7** | – | இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் GPS Map Camera மூலம் எடுக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | புகைப்படங்களின் அச்சிடப்பட்ட நகல் (9 எண்ணிக்கை) |
| **பி.சா.ஆ.8** | 20.02.2014 | பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் பதிவிறக்க நகல் |
| **பி.சா.ஆ.9** | – | இடையப்பட்டி மேற்கு கிராம புல எண்.475/3 மற்றும் 475/1 ஆகியவற்றிற்காக 'அ' பதிவேட்டு விவரங்களின் பதிவிறக்க நகல் |
| **பி.சா.ஆ.10** | – | இடையப்பட்டி மேற்கு கிராம புல எண்.475/2D, 475/2C, 475/2B2 மற்றும் 475/2A ஆகிய நிலங்களில் 'அ' பதிவேட்டு விவரங்களின் பதிவிறக்க நகல் |
| **பி.சா.ஆ.11** | – | பி.வா.சா.2–கிருஷ்ணன் என்பவரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் (அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.27 16:37:32 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**